# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## வரையறுக்கப்பட்ட கண்டி ஸ்ரீ புஷ்பதான சங்கம் (கூட்டிணைத்தல்)

**வரையறுக்கப்பட்ட கண்டி ஸ்ரீ புஷ்பதான சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திலும் அமுனுகம அவர்களால் 2015, நவெம்பர் மாதம் 24 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, நவெம்பர் மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ *23 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## வரையறுக்கப்பட்ட கண்டி ஸ்ரீ புஷ்பதான சங்கம் (கூட்டிணைத்தல்)

ச.வ.ஒ. 6/2006

## வரையறுக்கப்பட்ட கண்டி ஸ்ரீ புஷ்பதான சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

“வரையறுக்கப்பட்ட கண்டி ஸ்ரீ புஷ்பதான சங்கம்” என்று அழைக்கப்படும் சங்கத்தினாலும் அதன் அங்கத்தவர்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டதிட்டங்களுக்கமைய சங்கத்துடன் தொடர்புடைய சகல நோக்கங்கள் மற்றும் விடயங்களை பயன்மிகு வகையில் நடைமுறைப்படுத்தவும், நடாத்திச் செல்லவும் இதுவரை காலமும் தாபிக்கப்பட்டிருந்தமையினாலும் :

குறிப்பிடப்பட்ட சங்கம் நிறுவப்பட்டது குறித்ததொரு நோக்கத்துக்காகவும், விடயத்திற்காகவும் என்பதனாலும் இந்நோக்கமும் விடயமும் இதுவரையிலும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டும், செயற்படுத்தப்பட்டுள்ளமையினாலும் குறிக்கப்பட்ட சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளமையாலும் மேற்கண்ட வேண்டுகோள் நிறைவேற்றப்படுகின்றமை பொதுமக்கள் நலன்கருதியதாய் இருக்கின்றமையினாலும் :

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வரையறுக்கப்பட்ட கண்டி ஸ்ரீ புஷ்பதான சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

வரையறுக்கப்பட்ட கண்டி ஸ்ரீ புஷ்பதான சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியில் இருந்தும் (அதன்பின்னரும் “சங்கம்” என்று குறிப்பிடப்படும்) வரையறுக்கப்பட்ட கண்டி ஸ்ரீ புஷ்பதான சங்கத்தில் தற்பொழுது உறுப்புரிமை கொண்டிருக்கும் அங்கத்தவர்களும் இதன் மூலம் தாபிக்கப்படுகின்ற தரும நிறுவனத்திற்கு இதன் பின்னர் அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்ளப்படுகின்ற நபர்கள் இங்கு (இதன்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பிடப்படும்) வரையறுக்கப்பட்ட கண்டி ஸ்ரீ புஷ்பதான சங்கம் என்ற பெயர் மற்றும் முகவரியின் கீழ் தொடர்ந்து நிலவுகின்ற கூட்டுத்தாபனமாக இருத்தல் வேண்டுமென்பதோடு கூட்டுத்தாபனத்தால் மற்றும் இதற்கு எதிராக குறிக்கப்பட்ட

2-PL 009429 -300 (2015/10)

பெயரில் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர இயலும். மேலும் பொது இலச்சினை ஒன்றை வைத்துக் கொள்ளுதல், பாவித்தல், தமது சொந்த விருப்பின் பேரில் மாற்றுதல் என்பவற்றில் முழு உரிமையும், அதிகாரமும் குறிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்திற்கு உண்டு.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு வழிபாட்டிற்காக வரும் பக்தர்களுக்கு, பூரணை மற்றும் அமாவாசை தினங்களில் விசேடமாகவும் ஏனைய தினங்களில் சாதாரணமாகவும் பூசைகளுக்காக மலர் வழங்குதல் மற்றும் பூரணை தினங்களில் புனித தந்த தாதுவுக்கு பால் ஆகாரப் பூசை செய்தல் ;

(ஆ) யாத்திரிகர்களுக்கு சங்க மண்டபத்தில் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ;

(இ) பௌத்தர்களது சமய அறிவினை வளர்த்தல் நிமித்தம் பாடசாலை மற்றும் அறநெறிப் பாடசாலைகளை அமைத்து நடாத்திச் செல்லல் ;

(ஈ) ஞாயிற்றுக் கிழமைகளில் நடாத்தப்படுகின்ற அறநெறி வகுப்புகளுக்கு மேலதிகமாக அப்பாடசாலைகளுக்கிடையே பேச்சுப்போட்டி, விவாதப் போட்டி, பொது அறிவுப் போட்டிகள், கல்விச் சுற்றுலா மற்றும் பயிற்சிப் பட்டறைகளை ஏற்பாடு செய்தல் ;

(உ) பௌத்த நோக்கங்கள் மற்றும் பௌத்த கலாசாரம் என்பவற்றின் முன்னேற்றத்திற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் ;

(ஊ) பௌத்தர்களது சமய மற்றும் தேசிய அடையாளத்தினை பேணிப்பாதுகாக்கும் பொருட்டு கூட்டுத்தாபனம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் செயற்படும் என்பதோடு ஏனைய சமயத்தலைவர்களினதும், இனங்களினதும் உரிமைகளுக்கும் மதிப்பு வழங்குதல் ;

(எ) பௌத்தர்களினது பொருளாதார வளர்ச்சிக்கான மாற்றீடுகளை ஏற்படுத்தல் மற்றும் உறுப்பினர்களுக் கிடையே பரஸ்பர நல்லெண்ணத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல் ;

(ஏ) இல்லற-துறவற இருபாலரிடையேயும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தர்மதூதர்களை பயிற்றுவித்தல் ;

(ஐ) தொழிலற்ற இளைஞர் யுவதிகளுக்காக தொழிற்பயிற்சி நெறிகளை நடாத்துதல், அவர்களை தொழில்களுக்கு ஆற்றுப்படுத்துதல் ;

(ஒ) பரீட்சைகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு அனுசரணை வகுப்புக்களை நடாத்துதல் ;

(ஓ) தேசிய, கலாசாரம் மற்றும் சமய விசேடங்களுக்கு மெருகூட்டும் வகையில் வருடந்தோறும் யானைகளின் பங்குபற்றுதலுடன் ஒழுங்கு செய்யப்படும் மிஹிந்து பெரஹர சகல பொசன் பூரணை தினங்களிலும் கண்டி வீதிகளில் உலா வருவதனை ஒழுங்கு செய்தல் ;

(ஔ) இயற்கை மற்றும் தேசிய அனர்த்தங்களின்போது பாதிப்புற்றவர்களுக்கும், இடம்பெயர்ந்தவர்களுக்கும் தகுதியான வகையில் பண உதவிகளையும் ஏனைய உதவிகளையும் வழங்குதல் ; அத்துடன்

(க) சமயம் மற்றும் தேசிய கலாசாரத்தின் இருப்பிற்கு உதவக்கூடிய வகையில் செயற்படும் எந்தவொரு வெகுசன அமைப்புக்களுடனும் ஒத்துழைப்புடன் செயற்படுதல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) இக்கூட்டுத்தாபனம் இல்லற-துறவற ஐவருக்கு மேற்படாத ஆலோசனை சபை, பிரதான தலைவர், உபதலைவர்கள் மூவர், பிரதான செயலாளர், பொருளாளர் ஆகியோரை உள்ளடக்கிய நம்பிக்கையாளர் சபை. பிரதான தலைவர், மூன்று உப தலைவர்கள், பிரதான செயலாளர், உபசெயலாளர், பொருளாளர், பரிசோதகர், முகாமத்துவப் பணிப்பாளர், சமயப் பிரிவின்

செயலாளர் ஆகிய பத்துப் பேரை உள்ளடக்கிய உத்தியோகத்தர் சபை. இதற்கும் மேலாக பதினைந்து பேரை உள்ளடக்கிய நிருவாக சபை, பொதுச்சபை ஆகியவற்றைக் கொண்டது.

இதற்கும் மேலாக பொதுச்சபையின் விருப்பிற்கேற்ப தெரிவு செய்யப்படுகின்ற நிதி மற்றும் கட்டிடம், சமய மற்றும் கலாசார, கல்வி, சமூக சேவை மற்றும் விசேட கருத்திட்டங்கள் என்பதான நான்கு நிர்வாக சபைகளைக் கொண்டிருக்கும் என்பதோடு, அவ்வவ் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற போது ஏற்படுகின்ற தேவைகளுக்கேற்ப விசேட கருத்திட்ட துணைக் குழுக்கள் ஏற்படுத்தப்படும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் சட்டப்பிரகாரம் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தெரிவு செய்யப்படுகின்ற அல்லது பெயர் குறிப்பிடப்படுகின்ற வேறு நபர்கள் உள்ளடக்கியுள்ள இங்கு இதற்குப் பின்னர் சபை எனக் குறிப்பிடப்படுகின்ற முகாமைத்துவச் சபையினால் தற்காலத்தில் நடைமுறையில் உள்ள ஒழுங்கு விதிகளுக்கேற்ப நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முந்திய தினத்தன்று பதவி வகித்த சங்கத்தின் முகாமைத்துவச் சபையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைத்துவச் சபையாகுதல் வேண்டும்.

நம்பிக்கைச் சபை.

**5**. (1) சங்கத்தின் சகல அசையும், அசையாச் சொத்துக்களின் பொறுப்பு கூட்டுத்தாபனத்தின் சட்ட திட்டங்களுக்கேற்ப தெரிவு செய்யப்படுகின்ற எண்ணிக்கையிலான உறுப்பினர்களை உள்ளடக்கிய நம்பிக்கையாளர் சபைக்கு அந்த சட்டதிட்டங்களின் கீழ் பாராதீனப் படுத்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று பதவி வகித்த சங்கத்தின் நம்பிக்கையாளர் சபையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கையாளர் சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களை அடக்கியுள்ளதாக இருத்தல் வேண்டும் :-

(அ) விலைக்கு கொள்ளுதல், நன்கொடை, பரிசு, இறுதி விருப்புப் பத்திரத்தின் பேரில் கொடுத்தல் மூலம் அல்லது வேறு வகையில் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான அசையும், அசையாச் சொத்துக்களை கையேற்றல், வைத்திருத்தல், அபிவிருத்தி செய்தல் ;

(ஆ) அத்தகைய ஏதேனும் ஆதனத்தை விற்றல், அடகு வைத்தல், குத்தகைக்கு கொடுத்தல், கொடுத்து மாற்றுதல், வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் அலுவலர்களையும், ஊழியர்களையும் நியமித்தல், சேவைக்கமர்த்தல், பணிக்கொடை வழங்குதல், அவர்களின்மீது ஒழுக்காற்று கட்டுப்பாட்டை பிரயோகித்தல், அத்துடன் அவர்களை பதவி நீக்குதல் ;

(ஈ) காசாக அல்லது பொருளாகக் கிடைக்கும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு கொடைகளையும், பரிசுகளையும், நன்கொடைகளையும் ஏற்றுக் கொள்ளுதல் ;

(உ) வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், நிருவகித்தல், மூடிவிடுதல், பிணையுடன் அல்லது பிணையின்றி பணம் கடனாக எடுத்தல் அல்லது பெற்றுக் கொடுத்தல்;

(ஊ) அதன் நிதிகளை கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற முறைகளில் முதலீடு செய்தல் ; அத்துடன்

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அல்லது எய்துவதற்கு அவசியமானவாறானவையும், உகந்தவையுமான அத்தகைய எல்லாச் செயற்பாடுகளையும், காரியங்களையும் செய்தல்.

**7.** *(1)* கூட்டுத்தாபனத்தின் நிதியம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வற்றை உள்ளடக்கி இருத்தல் வேண்டும் :-

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

(அ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேர்முந்திய தினத் தன்று சங்கத்திற்கு வரவில் இருந்தவையும், அத்திகதி யில் இருந்து கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டியவையும் ;

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்தும் அதன் பின்னரும் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கும் நிதி.

*(2)* கூட்டுத்தாபனத்திற்கு வரவு வைக்கப்படும் சகல நிதிகளும் சங்க நடவடிக்கைகளின் முகாமைத்துவத்திற்கும், அதன் நோக்கங்களை அடையும் பொருட்டும் உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

**8.** *(1)* கூட்டுத்தாபனத்தின் மூலம் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்கு பெரும்பான்மை கொண்டு, கீழே குறிப்பிடப்படுகின்ற அனைத்து விடயங்களை அல்லது அவற்றில் சிலவற்றை இச்சட்டத்தினதும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்காலம் ஆக்குதல் சட்டத்திற்கு முறையாகும் :-

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

(அ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களை தெரிவு செய்தல் அல்லது பெயர் குறிப்பிடுதல், அவர்களின் அதிகாரம், கடமைகள், பதவிக் காலம் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு உத்தியோகத்தர்கள், பிரதிநிதிகள் மற்றும் சேவையாளர்களின் அதிகாரங் கள், நடத்தைகள், கடமை, வேலை ;

(இ) கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தலிலும், நடாத்துவதிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள், கூட்டம் இடம்பெறும் இடம், நேரம், நிகழ்ச்சி நிரல் மற்றும் கோரம், கூட்டங்களை நடாத்துல்;

(ஈ) சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் அங்கத்துவத்திற்கான தகைமைகளும், தகுதியீனங்களும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை கையாளுதல், நிதியத்தின் பொறுப்பு, கணக்குகளை நடைமுறைப் படுத்தல், கணக்குப் பரிசோதனை ; அத்துடன்

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்தல், அதன் நோக்கங்களை அடைதல்.

(2) 1 ஆம் உபபிரிவின் கீழ் செய்யப்படுகின்ற ஏதேனும் விதிகள், அதே போன்ற கூட்டமொன்றில் அதே முறையில் மாற்றப்படலாம், சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம், இல்லாதொழிக்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று வலுவிலுள்ள விதிகள் இச்சட்டத்தினதுமாகும் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராத வரையில் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படவுள்ளனவும், கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப் படவுள்ளனவுமான கடன்கள்.

**9**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்துக்குரிய சகல கடன்களும் பொறுப்புக்களும் சங்கத்தினால் செலுத்தப்பட்டிருத்தலும் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருத்தலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிலையத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுவதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவு தொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை செயலளாரின் கட்டுக்கோப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன் செயலாளர் மற்றும் சங்கத்தின் சட்டதிட்டங்களுக்கிசைவாக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையிலானோர் முன்னிலையில் அன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன் அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சனை.*

**11**. இச்சட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ளோரின் அல்லது அவர்கள் மூலம் அல்லது அவர்களால் அல்லது அவர்களின்கீழ் உரித்துள்ளோரின் உரிமைகள் தவிர குடியரசின் அல்லது ஏதேனும் அரச சபை அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது வேறு நபர்களின் உரிமைகளுக்கு இச்சட்டத்தில் உள்ளடங்கி இருக்கும் எதனாலும் பாதிப்போ அல்லது அச்சுறுத்தலோ ஏற்படக் கூடாது.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**12**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்